DITTO WS

Reg. No. : ...................................

Name : ..........................................

**S-2220**

**SECOND YEAR HIGHER SECONDARY**
**SAY / IMPROVEMENT EXAMINATION, JUNE – 2023**

Part – III

**TAMIL (Optional)**

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 15 Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

**1 முதல் 10 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் எட்டனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண் 1 வீதம்.**

**(8 × 1 மதிப்பெண் = 8)**

1. கவிஞர் வாணிதாசனின் இயற்பெயர்?
   (அ) கோ. இராஜேந்திரன் (ஆ) எத்திராஜு அரங்கசாமி
   (இ) கனகசுப்புரத்தினம் (ஈ) இரா. காமராசு

2. 'நகரம்' கவிதையின் ஆசிரியர்?
   (அ) கோன்சிரா (ஆ) நந்தலாலா
   (இ) கவிஞர் அறிவுமதி (ஈ) கவிஞர் பழனிபாரதி

3. தமிழக அரசின் பாவேந்தர் விருதைப் பெற்றவர்?
   (அ) கவிஞர் சாமி பழனியப்பன் (ஆ) மு. மேத்தா
   (இ) அருண் பாரதி (ஈ) மாலதி மைத்ரி

4. பேரறிஞர் அண்ணா எழுதிய நாடகம்?
   (அ) இருண்டவீடு (ஆ) வேலைக்காரி
   (இ) அன்னிமிஞ்ஞிலி (ஈ) மனோன்மணியம்



P.T.O.

DITTO WS

5. "நரகனுயிர்க்கு நல்லுயிர் கொண்டு பரகதியிழக்கும் பண்பீங்கில்லை" – இப்பாடல் வரிகள் வரும் இலக்கியம் எது?

(அ) மணிமேகலை (ஆ) வளையாபதி

(இ) சிலப்பதிகாரம் (ஈ) குண்டலகேசி

6. "சாதி மதநிற பேதமில் லாதொரு
சமரசங் காணுதம்மா
ஆதவன் கதிர்கள் போல் ஆன்ம ஒருமையில்
ஆருயிர் சேருதம்மா"
(யோகி சுத்தானந்த பாரதி)

மேற்காணும் பாடலில் வரும் 'ஆதவன்' எனும் சொல்லின் பொருள்?

(அ) ஆகாயம் (ஆ) நீர்

(இ) சந்திரன் (ஈ) சூரியன்

7. எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும் இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
– இக்கவிதை வரிகளைப் பாடியவர்?

(அ) பாரதிதாசன் (ஆ) பாரதியார்

(இ) ஞானக்கூத்தன் (ஈ) சிற்பி

8. இடைக்காலத்தில் எழுந்த நூல்?

(அ) பெரியபுராணம் (ஆ) குறுந்தொகை

(இ) தொல்காப்பியம் (ஈ) நற்றிணை

9. சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை?

(அ) 98 (ஆ) 96

(இ) 100 (ஈ) 97

10. Blog என்னும் ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம்?

(அ) இணையதளம் (ஆ) வலைப்பூ

(இ) புலனம் (ஈ) முகநூல்

**11 முதல் 18 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு விடை எழுதுங்கள். மதிப்பெண் 2 வீதம். (6 × 2 மதிப்பெண் = 12)**

11. முக்கூடற்பள்ளு – நூல் குறிப்பு எழுதுங்கள்

12. 'தாத்தா தொலைந்து போனார்' எனும் கதையின் முதன்மை கதாப்பாத்திரங்கள்?

DITTO WS

13. இராஜம் கிருஷ்ணனின் இரு நாவல்களின் பெயர்களை எழுதுங்கள்.

14. பருத்தி இழை நெசவு தொழில் நுட்பத்தின் இரண்டு படிநிலைகளை எழுதுங்கள்

15. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்.

    – இக்குறள் உணர்த்தும் கருத்தை எழுதுங்கள்.

16. "தலைப்பே செய்தியின் சாளரம்" – சிறு விளக்கம் எழுதுங்கள்.

17. பெண் சிறுகதையாளர்கள் இருவரின் பெயர்களை எழுதுங்கள்.

18. இரண்டு சமூக வலைதளங்களின் பெயர்களை எழுதுங்கள்.

**19 முதல் 24 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு அரைப்பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 4 வீதம்.**

**(5 × 4 மதிப்பெண்கள் = 20)**

19. "ஆயிரம் கைகளால்
அசிங்கப்படுத்திய நதியை
ஒரு கையால்
ஒரே ஒரு முறை சுத்தப்படுத்து"

    – இப்பாடல் வரிகளை மையப்படுத்தி விமர்சனக் குறிப்பு எழுதுங்கள்.

20. அப்ப எங்க
பாளையத்து சந்தையினா
பதினெட்டு பட்டியும் கூடுமுங்க
மண்பான யேவாரம் சூடு பறக்குமுங்க
இப்பவும் எங்க
பாளையத்து சந்தையினா
பதினெட்டு பட்டியும்
கூடுதுங்க
பிளாஸ்டிக்குட யேவாரம்
சூடுபிடிக்குதுங்க.

    -இப்பாடல் வரிகள் காட்டும் உணர்வுகளை ஒப்பீடு செய்து விமர்சனக் குறிப்பு எழுதுங்கள்.

21. எழில் எலிமலை ஆன விதம் குறித்து குறிப்பு எழுதுங்கள்.

22. 'பன்மொழி புலமையும் நன்மைகளும்' எனும் தலைப்பில் பெட்டிச் செய்தி தயார் செய்யுங்கள்

23. விமரிசன வகைகள் நான்கினை எழுதுங்கள்.

24. வலைப்பூ – விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.

**25 முதல் 29 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் நான்கனுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 6 வீதம். (4 × 6 மதிப்பெண்கள் = 24)**

25. கடலும் நீவாடுகளும் – சிறு கட்டுரை எழுதுங்கள்.

26. ஆயத்த வீடுகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுங்கள்.

27. சங்க காலம், சங்கம் மருவிய காலம் பற்றிய செய்திகளை உங்கள் பள்ளி மன்றத்தில் தொகுத்தளிப்பதற்கான சொற்பொழிவுரைத் தயார் செய்யுங்கள்.

28. சர்வதேசத் தாய் மொழி தினத்தன்று உங்கள் பள்ளிச் செய்தித்தாளில் வெளியிட 'தாய் மொழியில் கல்வி' என்னும் தலைப்பில் தலையங்கம் எழுதுங்கள்.

29. இதழியல் உத்திகளில் ஒன்றான தலைப்பின் முக்கியத்துவம் குறித்து விளக்கக் கட்டுரை எழுதுங்கள்.

**30 முதல் 32 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 8 வீதம். (2 × 8 மதிப்பெண்கள் = 16)**

30. சுற்றுச்சூழல் தினத்தையொட்டி நடத்தப்படும் கருத்தரங்கத்தில் பங்கேற்க 'இயற்கை சீற்றங்கள் : முன்னெச்சரிக்கையும் நடவடிக்கைகளும்' என்னும் தலைப்பில் கட்டுரை தயார் செய்யுங்கள்

31. பட்டுக்கோட்டைப் பாடல்களில் 'சமதர்மச் சிந்தனைகள்' எனும் தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை எழுதுங்கள்.

32. தமிழ் வளர்ச்சிக்கு வீரமாமுனிவர் செய்த தொண்டுகள் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.

---